முருகப்பெருமான் துணை

**மகான் தாயுமானசுவாமிகள் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.07.2023, திங்கட்கிழமை

1. பரமானந்த ஞான குருவே
   பாமரரும் ஞானம் அடைய
   வரமாகத் தந்தருளும் திருவே
   வள்ளலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது ஆனி திங்கள்
   குறைவிலா இருபானைதிகதி சோமவாரம்
   (சோபகிருது வருடம் ஆனி மாதம் 25ம் நாள், 10.07.2023, திங்கட்கிழமை)
   அறிவுரை ஆசிதனை தாயுமான சுவாமிகளும்
   அருளுவேன் உலகநலம் பெற
3. நலம்தரும் அரங்கன் திருவடி
   ஞானத்திருவடியாக வருக
   வலம்வரும் மறை நூலை
   வணங்கி மக்கள் வாசித்துவர
4. வருபவர்க்கு அரங்க ஞானி
   வரமதனை தேடிவந்து அருள
   குருவருள் தரிசணம் கண்டு
   குறைதீர்க்கும் தீட்சை ஏற்க
5. ஏற்கவே உலக மக்களுக்கு
   இலகுவாய் வாழ்வில் மாற்றம்
   ஏற்கின்ற கேட்கின்ற வண்ணம்
   எல்லாம் வசமாகிட நேரும்
6. நேருமை கொண்டு வாழவும்
   நீதிவழி நடந்து தன்னை
   தரும ஞானவான்களாக மாற்றவும்
   தக்கபடி குருவருள் வழிநடத்தும்

7. நடத்தையில் மாசு கண்டிடா
நன்னெறி தவறா வண்ணம்
இடரை உலகினில் வெல்லும்
ஏகாந்த சக்திகளாக மாறுவர்
8. மாறவே உலகம் எங்கிலும்
மக்களிடை தேற்றம் பரவி
ஆறுதலாய் உலகம் தன்னில்
ஆளுமைகட்கு நீதிமான்களை
9. நீதிமான்களையே தேர்வு செய்து
நிலவுலகில் களவு மாயை
விதியென அடிமைநிலை கொண்ட
வினைகளை எல்லாம் விரட்டி
10. விரட்டியே ஆட்சிதான் வள்ளலே
வையகம் ஆண்டிட மாட்சிமை மிக்க
இரட்டிப்பான செழிப்புமிக்க மண்ணுலகம்
இனிதே படைத்திட செயல்படுவோம்
11. செயலும் சேவையும் யாவுமான
செந்தூரான் அரங்கன் வழி
தயவாக இறங்கி நடத்திட
தரணியில் சடுதி மாற்றம் நிகழுமே
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—